# பணிக்கு விண்ணப்பிப்பவருக்கான தனியுரிமை அறிக்கை

கடைசிப் புதுப்பிப்பு: ஜூன் 30, 2023

RTX கழகம் மற்றும் அதன் துணை & இணை நிறுவனங்கள் (மொத்தமாக "RTX" என்று அழைக்கப்படுகிறது) அதன் ஆன்லைன் விண்ணப்பத்தின் தனியுரிமை, பணிக்குத் தேர்ந்தெடுப்பதற்கான அமைப்புகள், RTX நிறுவனத்தில் வேலைவாய்ப்பைப் பெறும் நோக்கத்தில் ஒரு தனிநபர் வழங்கக்கூடிய ஏதேனும் தகவல்கள் ஆகியவற்றுக்குப் பொறுப்பாகும். பல்வேறு நாடுகளில் இருந்து பணிக்கான விண்ணப்பங்களைப் பெறுவதற்கும் பரிசீலனை செய்வதற்கும் RTX பல்வேறு அமைப்புகளைக் கொண்டுள்ளது. பணிக்கு விண்ணப்பிப்பவருக்கான இந்தத் தனியுரிமை அறிக்கை RTX தனது பணி விண்ணப்பங்களுக்காகப் பயன்படுத்தும் எலக்ட்ரானிக் அமைப்புகளுக்கும் ஆன்லைன் சிஸ்டம் இல்லாத சில இடங்களில் மேற்கொள்ளும் செயல்முறைகளுக்கும் பொருந்தும். இவ்விரு வழிமுறைகளுக்கும் RTX நாங்கள் சேகரிக்கக்கூடிய தனிப்பட்ட

தகவல்களைப் பாதுகாப்பதற்கான தொழில்நுட்ப, நிர்வாக மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளைச் செயல்படுத்தியுள்ளது.

RTXஸின் தொழில் வாழ்வு இணையதளம் உட்பட ஆன்லைன் வேலைவாய்ப்பு விண்ணப்பப் படிவம் மற்றும் பணிக்குத் தேர்ந்தெடுப்பதற்கான அமைப்புகள் ஆகியவை RTXஸில் பணிக்கு ஆட்களைச் சேர்ப்பதற்கும் RTXஸில் பணிக்குத் தனிநபர்களை விண்ணப்பிக்க அனுமதிப்பதற்கும் பணிக்கான விண்ணப்பங்களைப் பெறுவதற்குப் பொருந்தக்கூடிய சட்ட & ஒழுங்குமுறைக்கான தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும் பயன்படுத்துகின்றன. இந்த அமைப்புகள் Raytheon Techonologiesஸில் வேலைவாய்ப்புகளைப் பார்வையாளர்கள் பரிசீலிப்பதற்காக (அவற்றுக்கு விண்ணப்பிக்கவும்) வடிவமைக்கப்பட்டவை ஆகும். RTXஸின் பணிக்கான ஆன்லைன் விண்ணப்பப்படிவத்தையும் பணிக்குத் தேர்ந்தெடுப்பதற்கான அமைப்புகளையும் வேறு எதற்கும் பயன்படுத்த வேண்டாம்.

சில விதிவிலக்குகளைத் தவிர, குறைந்தது 18 வயதை அடைந்தவர்களிடமிருந்து மட்டுமே RTX விண்ணப்பங்களைப் பெறும். நீங்கள் 18 வயதுக்குட்பட்டவர் எனில், உங்களுக்கு ஆணையிடப்பட்டால் தவிர ஒரு பணிக்காக நீங்கள் விண்ணப்பிக்கும்போது RTXஸுக்கு உங்கள் தனிப்பட்ட தகவல்களைச் சமர்ப்பிக்க வேண்டாம்.

அறிவிப்பை வழங்கி இந்த அறிக்கையை அவ்வப்போது மாற்றக்கூடும். இந்த அறிக்கையில் ஏதேனும் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளனவா என்பதை அவ்வப்போது படித்துத் தெரிந்துகொள்ளுமாறு ஊக்குவிக்கிறோம்.

ஒருவரை அடையாளங்காட்டுகின்ற அல்லது அடையாளம் காட்டக்கூடிய எந்தத் தரவையும் தனிப்பட்ட தகவல்களாக RTX வரையறுக்கிறது.

## RTX எவ்வகையான தனிப்பட்ட தகவல்களைச் சேகரிக்கக்கூடும்?

RTXஸில் பணிக்கான ஆன்லைன் விண்ணப்ப அமைப்புகளில் பதிவிட்டவற்றை மதிப்பாய்வு செய்யவும் வேலை வாய்ப்புகள் பற்றி RTXஸைத் தொடர்புகொள்ளவும் RTXஸில் பணிக்கு விண்ணப்பிக்கவும் உங்கள் தனிப்பட்ட தகவல்களை வழங்குமாறு உங்களிடம் கேட்கப்படும். உங்கள் பணி உறுதிப்படுத்தப்பட்டதும் அல்லது தொடங்கியதும் உங்களிடம் பின்வரும் தனிப்பட்ட தகவல்கள் கேட்கப்படலாம் (சில நாடுகளைப் பொறுத்து இவற்றில் சில தரவுப் பகுதிகள் கேட்கப்படாமல் போகலாம் அல்லது கேட்கப்படக்கூடும்):

- பெயர்

- வீட்டு முகவரி, வீட்டின் ஃபோன் எண் மற்றும் மின்னஞ்சல் முகவரி உட்பட தொடர்புத் தகவல்கள்
- பிறந்த தேதி
- ஓட்டுநர் உரிமம் உட்பட அரசாங்க அடையாள ஆவணம் அல்லது எண்
- முந்தைய பணித் தகவல்கள்
- கல்வி
- சுயவிவரம் அல்லது CV மற்றும்/அல்லது கவர் லெட்டர் உட்பட நீங்கள் அந்த ஆவணங்களில் வழங்கக்கூடிய தகவல்கள்
- குடியுரிமை மற்றும்/அல்லது சட்டப்பூர்விலான நிரந்தரக் குடியுரிமை
- குடிப்பெயர்வு நிலையின் ஆவணம் உட்பட பணிபுரிவதற்கான தகுதிநிலை
- வேலைவாய்ப்புகளில் ஆர்வம்
- குறிப்பிட்ட பணிக்கு விண்ணப்பிப்பவரின் உடல்தகுதியுடன் தொடர்புடைய பணி குறித்த கேள்விகள்
- பரிந்துரைகள் (பிறரின் தகவல்களை RTXஸிற்கு நீங்கள் வழங்கும் முன்பாக அவர்களின் ஒப்புதலைப் பெற வேண்டும்)
- சில நாடுகளின் சட்டத்தின்படி நாங்கள் கேட்கக்கூடிய சில தகவல்கள். அவை: நீங்கள் முன்னதாக அரசு நிறுவனத்தில் வேலை செய்துள்ளீர்களா, அரசு அதிகாரி, RTX அதிகாரி அல்லது RTX நிறுவனத்தின் இயக்குநர்கள் குழு உறுப்பினரின் உறவினரா அல்லது தற்போதைய அல்லது முன்னாள் பணியாளருடன் கட்டுப்பாட்டு உடன்படிக்கை செய்துள்ளீர்களா என்பது பற்றிய தகவல்கள்
- உங்களுக்குப் பணி வழங்குவது முரண்பாட்டை உருவாக்காது அல்லது பொருந்தக்கூடிய சட்டம்/ஒழுங்குமுறையை மீறாது என்பதை உறுதிப்படுத்த RTXஸுக்குத் தேவைப்படும் தகவல்கள்
- தாமாகவே முன்வந்து வழங்கக்கூடிய உங்களுடைய இனம், பாலினம், பாலின அடையாளம், பாலியல் நாட்டம், அனுபவ நிலை, இயலாமை போன்ற தகவல்கள்
- இணையதளத்திற்கு நீங்கள் மீண்டும் வரும்போது உங்களை அடையாளம் காணப் பயன்படுத்துவதற்கு நீங்கள் வழங்கும் பாதுகாப்புக் கேள்விகள் மற்றும் பதில்கள்

- வேலைவாய்ப்பு குறித்து நீங்கள் அறிந்துகொண்ட இடம்
- உங்கள் விண்ணப்பத்தின் ஒரு பகுதியாக நீங்கள் வழங்கக்கூடிய ஏதேனும் பிற தகவல்கள்
- மூன்றாம் தரப்பு இணையதளங்கள் மூலம் நீங்கள் பணிக்கு விண்ணப்பித்திருந்தால் அவை வழங்கும் தகவல்கள்

சில நாடுகளில் விண்ணப்பதாரர்களிடம் அவர்களின் இனம், பாலினம், பாலின அடையாளம், பாலியல் நாட்டம், அனுபவ நிலை, இயலாமை போன்ற தகவல்களை RTX வழங்கக்கோரும். அந்தத் தகவல்கள் முற்றிலும் உங்களின் விருப்பத்திற்குரியன. அத்துடன், அந்தத் தகவல்களை வழங்குவதோ வழங்காமல் இருப்பதோ உங்களுக்குப் பணி கிடைப்பதில் தாக்கத்தை ஏற்படுத்தாது. அமெரிக்கா (அமெரிக்கப் பிராந்தியங்கள் உட்பட), யுனைடெட் கிங்டம் போன்ற நாடுகளில் பாலின மற்றும் இன அடையாளத்தை வெளிப்படுத்த வேண்டாமென நீங்கள் தேர்வுசெய்தால், உங்களைப் பணிக்குச் சேர்க்கும்போது உங்களின் சார்பாக நாங்கள் அதில் ஏதேனும் சேர்க்க வேண்டியிருக்கும். நாடுகளின்/மாநிலங்களின் சட்டங்களின்படி தேவையான பகுதிகளில், பணிக்கு விண்ணப்பிப்பவர்களிடம் இருந்து அவர்களின் மதத்தைப் பற்றிய தகவல்களைச் சேகரிக்கிறோம்.

சில பணிகள் மற்றும் பகுதிகளில் மருத்துவப் பரிசோதனை, கேட்டல் மற்றும் பார்வைப் பரிசோதனை, ஊக்க மருந்துப் பரிசோதனை, பின்புலச் சரிபார்ப்பு, குற்றப் பின்னணிச் சரிபார்ப்பு ஆகியவற்றைச் செய்யுமாறு உங்களிடம் கேட்கப்படக்கூடும். இவை உங்கள் ஒப்புதலுக்குப் பிறகே மேற்கொள்ளப்படும். ஆனால் சில சூழல்களில் இவற்றில் ஒன்று அல்லது அதற்கும் மேற்பட்ட சரிபார்ப்புகளை நீங்கள் நிறைவுசெய்த பிறகே உங்களுக்குப் பணிக்கான வாய்ப்பு வழங்கப்படும். குற்றவியல் பின்புலச் சரிபார்ப்புகளை மேற்கொள்ளத் தடைசெய்யப்பட்ட பகுதிகளில் RTX அவற்றை மேற்கொள்வதில்லை. விண்ணப்பத்தில் நீங்கள் வழங்கிய பரிந்துரைகள், ஓட்டுநர் உரிமம் மற்றும் விவரங்கள், கல்வி, முந்தைய பணி விவரங்கள் போன்ற தகவல்களை உங்களிடம் கூடுதல் ஒப்புதல் பெறாமல் RTX உறுதிப்படுத்தக்கூடும்.

RTXஸின் ஆன்லைன் பணி விண்ணப்ப அமைப்பை நீங்கள் மொபைல் சாதனத்தில் அணுகினால், இணையதளம் உங்கள் சாதனத்துடன் தொடர்புகொள்வதற்குத் தேவையான தகவல்களைச் சேகரிக்கும். அத்துடன், நீங்கள் கோரக்கூடிய ஏதேனும் பிரத்தியேகமாக்கலை வழங்கும். இந்தத் தகவல்களில் உங்கள் சாதன அடையாளம், எண், மொபைல் நிறுவனம், உங்கள் இருப்பிடம் போன்ற தகவல்கள் இருக்கக்கூடும்.

மேலும், RTX அதன் பணிக்கான விண்ணப்ப இணையதளத்தில் பயனரின் டொமைன் பெயர், உலாவி வகை, அணுகல் தேதி & நேரம், பார்த்த பக்கங்கள் உட்பட பயனரின் முறையான பேட்டர்ன்களைக் கண்காணிக்கும். எங்கள் இணைய சர்வர்கள் பார்வையாளர்களின் டொமைன் பெயர்களைச் சேகரிக்கும். ஆனால் அவர்கள் மின்னஞ்சல் முகவரிகளைச் சேகரிக்காது. எங்களின் இணையதளங்களுக்கு வருபவர்களின் எண்ணிக்கையை அளவிடவும் குறிப்பிட்ட பகுதிகளில் கிடைக்கும் வரவேற்பைப் பொறுத்து இணையதளத்தின் எந்தப் பகுதிகள் பயனர்களுக்குப் பயனுள்ளதாக இருக்குமெனத் தீர்மானிக்கவும் இந்தத் தகவல்கள் சேகரிக்கப்படுகின்றன. பயனரின் அனுபவத்தை மேம்படுத்தவும் பயனரின் ஆர்வங்களின் அடிப்படையில் சிறந்த உள்ளடக்கத்தை வழங்கவும் இந்தத் தகவல்களை RTX பயன்படுத்துகிறது.

சில பணியிடங்களுக்கு, உங்களிடம் பாதுகாப்பு அனுமதிச் சான்றிதழ் உள்ளது மற்றும்/அல்லது உலக வர்த்தக அங்கீகாரம் பெறுவதற்குத் தகுதியானவர் என்பதை உறுதிப்படுத்த RTXஸில் பணிக்குச் சேர்வதற்கு முன்பாகக் கூடுதல் தகவல்களை நீங்கள் வழங்க வேண்டியிருக்கலாம்.

பெரும்பாலான நேரங்களில், ஆன்லைனில் விண்ணப்பத்தை நீங்கள் பூர்த்திசெய்யும்போதோ நேர்காணல் போன்ற விண்ணப்பச் செயல்முறையின்போதோ உங்களிடம் இருந்து உங்களின் தனிப்பட்ட தகவல்களை நேரடியாகவே RTX பெறும். பொருந்தும் சட்டத்தின் அனுமதிக்கும் அளவுக்கு RTX நீங்கள் முன்னர் பணிசெய்த நிறுவனங்கள், நீங்கள் வழங்கும் பரிந்துரைகள், பணிக்குத் தேர்ந்தெடுக்கும் அமைப்புகள், பின்புலச் சரிபார்ப்பின் ஒரு பகுதியாகப் பொதுவான பதிவு மூலங்கள், மூன்றாம் தரப்பினர் ஆகியோரிடம் இருந்து மறைமுகமாகவும் தனிப்பட்ட தகவல்களைச் சேகரிக்கக்கூடும்.

## RTX அது சேகரிக்கும் தகவல்களை எப்படிப் பயன்படுத்தக்கூடும்?

சேகரிக்கப்படும் ஏதேனும் தனிப்பட்ட தகவல்கள் பின்வரும் நோக்கங்களுக்குப் பயன்படுத்தப்படலாம்:

- RTXஸில் பணிக்காக விண்ணப்பிக்க உங்களை அனுமதித்தல் மற்றும் உங்கள் விண்ணப்பத்தை மதிப்பிடுதல் (தொலைபேசி வாயிலாகக் கேள்விகள் கேட்பது, நேர்காணல்கள் செய்வது மற்றும் பிற பொருந்தக்கூடிய தேர்வுகளை ஏற்பாடு செய்வது மற்றும் நடத்துவது உட்பட)
- இருக்கக்கூடிய அல்லது இருக்கும் பிற வாய்ப்புகளுக்கு உங்களை விண்ணப்பிக்க அழைத்தல் அல்லது உங்களைப் பரிசீலித்தல்

- விண்ணப்பம் அல்லது பிற வாய்ப்பு குறித்து உங்களைத் தொடர்புகொள்ளுதல் அல்லது மாற்றங்களைத் தெரிவித்தல்

- பரிந்துரைச் சரிபார்ப்புகளைச் சரிபார்த்தல், பொருத்தமான குற்றவியல் பதிவுகள் மற்றும் பின்புலச் சரிபார்ப்புகளை மேற்கொள்ளுதல் மற்றும் மறுக்கப்பட்ட தரப்பினருக்கான சரிபார்த்தல்

- நீங்கள் பணிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டால், உங்கள் பணியை எளிதாக்குதல் மற்றும் பணியை நிர்வகித்தல்

- பணிக்கு விண்ணப்பிப்பவர்களை உட்படுத்திய சட்டரீதியான மற்றும் ஒழுங்குமுறைத் தேவைகளுக்கு இணங்குதல் (அரசு நிறுவனங்களுக்கு அறிக்கைகள் வழங்குதல் உட்பட)

- உங்கள் அனுபவம் பற்றிய கருத்தை வழங்கும் (எ.கா. கருத்துக்கணிப்பு வழியாக) வாய்ப்புகளை உங்களுக்கு வழங்குதல்

- பன்முகத்தன்மை, சமத்துவம் மற்றும் உள்ளடக்கிய பகுப்பாய்வு உள்ளிட்ட RTXஸின் பணிக்குத் தேர்வுசெய்தல் நடைமுறைகளைப் புரிந்துகொள்வதற்கும் மேம்படுத்துவதற்கும் விண்ணப்பதாரரின் போக்கைப் பகுப்பாய்வு செய்தல்

- இங்கு பட்டியலிடப்பட்டுள்ள பிற நோக்கங்களில் ஒன்றின் பாதுகாப்பை உறுதிப்படுத்த உங்கள் அடையாளத்தைச் சரிபார்த்தல்

- RTXஸின் எலக்ட்ரானிக் சிஸ்டங்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துதல் மற்றும் மேம்படுத்துதல்

- மோசடிக்கு எதிராகப் பாதுகாத்தல்

- நிறுவனத்திற்குள்ளாக விசாரணை நடத்துதல் மற்றும் சட்ட ஒழுங்குமுறைகளுடன் இணங்குதல்

## RTX அது சேகரிக்கும் தனிப்பட்ட தகவல்களை யாரிடம் பகிர்கிறது?

பின்வருபவற்றுக்குத் தவிர RTX குழுமத்திற்கு வெளியில் எவருடனும் உங்கள் தனிப்பட்ட தகவல்களை RTX விற்கவோ பகிரவோ செய்யாது:

- எங்கள் சார்பாகச் சேவைகளை வழங்குவதற்காக RTX வைத்துள்ள சேவை வழங்குநர்களை அனுமதித்தல் அத்தகைய சூழல்களில் மேலே குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்களுக்காக மட்டுமே சேவை வழங்குநர்களிடம் RTX தகவல்களைப் பகிரும். RTX உங்கள் தனிப்பட்ட

தகவல்களைப் பகிரக்கூடிய சேவை வழங்குநர்களின் வகைகளில் பின்வருவன அடங்கும்: மனிதவளத் தகவல்கள் செயலிகள் (Workday போன்றவை); டிஜிட்டல் அவுட்ச்சோர்ஸிங் (தற்செயலான அணுகல் உடையவர்கள்); பணிக்குத் தேர்ந்தெடுத்தல் மற்றும் திறன் மேம்பாட்டுச் சேவை வழங்குநர்கள்; பின்புலச் சரிபார்ப்புச் சேவை வழங்குநர்கள் (பொருந்தக்கூடிய அளவுக்கு); இடமாற்றுக்கான சேவை வழங்குநர்கள் (பொருந்தக்கூடிய அளவுக்கு) மற்றும் உங்கள் பணியை நிர்வகிக்கத் தேவைப்படக்கூடிய பிற சேவை வழங்குநர்கள். எங்களின் சார்பாகவோ சட்டப்பூர்வத் தேவைகளுடன் இணங்குவதற்கோ சேவைகளை மேற்கொள்ளும் தேவை ஏற்படும் சூழல்கள் தவிர, தகவல்களைப் பயன்படுத்துவதிலோ வெளியிடுவதிலோ இருந்தோ ஒப்பந்தத்தின்படி இந்தச் சேவை வழங்குநர்கள் தடைசெய்யப்படுவார்கள்

- வரி மற்றும் ஒழுங்குமுறைக் கடமைகளுக்கு இணங்குதல், தொழிலாளர்/வர்த்தகச் சங்கங்கள், பணிகள் அமைப்புகளுக்குத் தரவைப் பகிர்தல், சட்ட அமலாக்கத்திற்குப் பதிலளித்தல்/சட்ட அமலாக்க அதிகாரிகள் அல்லது பிற அரசு நிர்வாகிகள் அனுப்பும் முறையான சட்டக் கோரிக்கைக்குப் பதிலளித்தல் உட்பட (ஆனால் அவை மட்டும் அல்லாமல்) சட்டப்பூர்வக் கடமைகளுக்கு இணங்குதல்
- சந்தேகத்திற்குரிய அல்லது அசலான கொள்கை, நெறிமுறை அல்லது இணக்க மீறல்கள் அல்லது சட்டவிரோதச் செயல்பாட்டை விசாரித்தல்
- உடல் சார்ந்த தீங்கைத் தடுத்து தொழிலாளியின் பாதுகாப்பை உறுதிசெய்தல்
- உங்கள் பிசினஸ் அல்லது சொத்துகளை (வங்கி திவால் உட்பட) முழுமையாகவோ ஒரு பகுதியையோ விற்கவோ கைமாற்றவோ உதவுதல்

RTXஸிற்கு அதன் ஆன்லைன் பணி விண்ணப்ப அமைப்புகளுக்கு உதவ பல்வேறு சேவை வழங்குநர்கள் உள்ளனர். இந்தச் சேவை வழங்குநர்கள் எங்கள் மனிதவளத் தகவல் அமைப்புகளையும் வேலைவாய்ப்பு இணையதளங்களையும் நிர்வகிக்கின்றனர், மாற்றுச் சேமிப்பகத்தை வழங்குகின்றன, வேலை வாய்ப்புகளில் உதவுகின்றன, வீடியோ நேர்காணல்களை அனுமதிக்கின்றன மற்றும் விண்ணப்பதாரர்களைப் பணிக்கு எடுக்கும் செயல்பாட்டை எளிதாக்குகின்றன. பிற சேவை வழங்குநர்களையும் RTX பயன்படுத்தக்கூடும். ஆனால் இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்களுக்காகவே ஏதேனும் சேவை பயன்படுத்தப்படும். அத்துடன், மேலே குறிப்பிட்ட ஒப்பந்தத்தின்படி சேவைகளை வழங்கும். நேர்காணலைத் திட்டமிடுவது, நேர்காணலின் முதல் சுற்றை நடத்துவது போன்ற எங்கள் சேவை

வழங்குநர்களில் ஒருவர் உங்கள் விண்ணப்பச் செயல்பாட்டின்போது உங்களை நேரடியாகத் தொடர்புகொள்ளக்கூடும்.

## உங்கள் தனிப்பட்ட தகவல்களை RTX நிறுவனம் எங்கே சேமிக்கும்?

RTX உலகளவில் பல்வேறு நாடுகளில் பல இடங்களில் இருக்கும் ஒரு நிறுவனம் என்பதால் மேலே பட்டியலிடப்பட்டுள்ள நோக்கங்களை நிறைவேற்றுவதற்காகப் பிற நாடுகளில் எங்கள் சேவைகள் வழங்குநர்களுடன் பகிர்வது உட்பட உங்கள் தகவல்களை ஒரு சட்டப்பூர்வ நிறுவனத்தில் இருந்து மற்றொன்றுக்கோ ஒரு நாட்டில் இருந்து இன்னொரு நாட்டிற்கோ நாங்கள் மாற்றக்கூடும். இந்த நாடுகளில் குறைந்தபட்சம் அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியத்தின் சில உறுப்பு நாடுகள், யுனைடெட் கிங்டம், கனடா மற்றும் ஆசியாவில் உள்ள சில நாடுகள் உட்பட பிற நாடுகள் அடங்கும் பொருந்தும் சட்டப்பூர்வத் தேவைகள் மற்றும் மேலே குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்களுக்குத் தேவையான அளவுக்கு மட்டுமே இணக்கமாக உங்கள் தனிப்பட்ட தகவல்களைப் பரிமாற்றம் செய்வோம்.

எல்லைகளுக்கு இடையே தனிப்பட்ட தகவல்களைச் சட்டப்பூர்வ முறையில் பரிமாற்றவும் சட்டத்தின்படி போதுமான அளவு பாதுகாப்பை உறுதிசெய்யவும் RTX கிடைக்கும் சட்டப்பூர்வ வழிமுறைகளைச் சார்ந்துள்ளது. பரிமாற்றுவதற்காக RTX நிலையான ஒப்பந்த விதிமுறைகள் (மாதிரி விதிமுறைகள் என்று அழைக்கப்படும்) அல்லது கட்டுப்படுத்தும் கார்ப்பரேட் விதிமுறைகளைச் சார்ந்துள்ள அளவுக்கு, அந்த நிபந்தனைகளுக்கும் இந்த அறிக்கைக்கும் இடையே முரண்பாடு ஏற்படும் சூழல் உட்பட அந்த நிபந்தனைகளுடன் RTX இணங்கிச் செயல்படும். RTXஸின் கட்டுப்படுத்தும் கார்ப்பரேட் விதிமுறைகளைபடிக்க, தனியுரிமை | RTX என்பதன் மேல்வலதுபுறத்தில் உள்ள கீழ்த் தோன்றும் மெனுவைப் பயன்படுத்தவும்.

## உங்கள் தனிப்பட்ட தகவல்களை RTX எவ்வளவு காலம் வரை வைத்திருக்கும்?

அமெரிக்காவில் உள்ள அல்லது அமெரிக்க அரசாங்க ஒப்பந்தத்தை ஆதரிக்கின்ற அனைத்துப் பணியிடங்களுக்கும் RTX உங்கள் விண்ணப்பத் தகவல்களைக் குறைந்தபட்சம் 3 ஆண்டுகள் வரை வைத்திருக்க வேண்டும். அந்தக் கால வரையறை என்பது சட்டம், கொள்கை, நிர்வாகம் அல்லது நீதிமன்றச் செயல்பாடு மற்றும் தணிக்கைக் கடமைகளின் தேவைக்கு ஏற்ப நீட்டிக்கப்படக்கூடும். அமெரிக்காவில் வசிக்காமல் இருந்து அமெரிக்காவில் பணிக்கு விண்ணப்பித்துள்ளீர்கள் எனில், உங்களுக்கும் இந்தத் தக்கவைப்பு

நிபந்தனை உங்களுக்குப் பொருந்தும். இந்தத் தக்கவைப்புக் காலத்தில் அமெரிக்கப் பணி விண்ணப்பங்களை நீக்குவதற்கு நாங்கள் அனுமதி அளிக்க மாட்டோம்.

இல்லையெனில், RTX உங்கள் தகவல்களைப் பின்வருமாறு தக்கவைத்துக்கொள்ளும்:

சுயவிவரத் தகவல்கள்: RTX ஆன்லைன் பணி விண்ணப்பக் கருவியில் உங்கள் சுயவிவரத்தின் ஒரு பகுதியாக நீங்கள் உள்ளிடும் தகவல்களுக்கு, அந்தக் கடைசிச் செயல்பாட்டில் இருந்து மூன்று ஆண்டுகள் அந்தத் தகவல்களை வைத்திருப்போம். உங்கள் சுயவிவரம் நீக்கப்படுவதற்கு முன்பாக உங்களுக்கு எச்சரிக்கை அனுப்ப முயல்வோம். ஆனால் அப்படிச் செய்வதில் இருந்து நாங்கள் தடுக்கப்படக்கூடும். இதனால், உங்கள் கணக்கைத் தொடர்ந்து பயன்படுத்த வேண்டுமெனில், அதை அவ்வப்போது புதுப்பிக்க வேண்டும்.

வெற்றிபெறாத விண்ணப்பங்கள்: வெற்றிபெறாத விண்ணப்பதாரர்களுக்கு, பொருந்தக்கூடிய, உள்ளூர் சட்டத்தின்படி குறிப்பிட்ட காலத்திற்கு உங்கள் விண்ணப்பத் தகவல்களை RTX தக்கவைக்கும். பொருந்தக்கூடிய உள்நாட்டுச் சட்டம் இல்லையெனில் தனிப்பட்ட தகவல்களை RTX நியாயமான குறிப்பிட்ட கால அளவிற்குத் தக்கவைக்கும். அந்தக் காலம் குறித்த கூடுதல் தகவல்களுக்கு RTXrecruiting@rtx.com என்ற முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்பவும்.

வெற்றிகரமான விண்ணப்பங்கள்: வெற்றிபெற்ற விண்ணப்பதாரர்களுக்கு, உங்களைப் பணியில் சேர்ப்பதற்கு ஏதுவாக RTX உங்கள் தகவல்களைத் தக்கவைத்துக்கொள்ளும். உங்கள் விண்ணப்பத்தில் இருந்து பெறப்படும் தகவல்கள் வேலைவாய்ப்பு நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படுகின்றன. அத்துடன், பணியாளர் தனியுரிமை அறிக்கையின்படி கையாளப்படும்.

எல்லாத் தருணங்களிலும் தனிப்பட்ட தகவல்களைத் தக்கவைத்தல் மற்றும் நீக்குவது என்பது சட்டம் அல்லது ஒழுங்குமுறை, நீதிமன்றம், நிர்வாக அல்லது நடுவர் மன்ற நடவடிக்கை அல்லது தணிக்கைக்கான தேவையைப் பொறுத்தே அமையக்கூடும். இந்த ஒவ்வொரு தருணங்களிலும், பொருந்தக்கூடிய கடமைகளின்படி இந்த அறிக்கையில் குறிப்பிட்டதை விட அதிகக் காலம் RTX தக்கவைக்க வேண்டியிருக்கலாம்.

தக்கவைப்புக் காலக்கெடுகள் மற்றும் விண்ணப்பதாரர்களின் நீக்குதல் கோரிக்கைகளைக் கடந்து RTX தனது பணிக்கான தேர்ந்தெடுப்பு நடைமுறைகளைப் புரிந்துகொள்ளவும் அதை மேம்படுத்தவும் புள்ளிவிவரங்களுக்காக அடையாளங்காண முடியாத தரவைத் தக்கவைக்கக்கூடும்.

# உங்கள் தனிப்பட்ட தகவல்களை RTX எப்படிப் பயன்படுத்துகிறது என்பது குறித்து உங்களுக்கு இருக்கும் விருப்பங்கள் என்னென்ன?

உங்கள் தனிப்பட்ட தகவல்களை RTXஸிற்கு வழங்கலாமா வேண்டாமா என நீங்கள் தேர்வுசெய்யலாம். ஆனால், தகவல்களை வழங்க வேண்டாம் என நீங்கள் தேர்வுசெய்தால் RTXஸில் பணியாற்ற உங்களுக்கு வாய்ப்பு கிடைக்காது. உங்கள் விண்ணப்பத்தைச் சமர்ப்பிப்பதற்கான ஒப்புதலை எப்போது வேண்டுமானாலும் திரும்பப் பெறுவதற்கு உங்களுக்கு உரிமை உள்ளது. எனினும் (அமெரிக்கா போன்ற) சில நாட்டுச் சட்டங்களின்படி அந்த நாட்டில் நீங்கள் பணிக்காக விண்ணப்பித்திருந்தால் உங்கள் விண்ணப்பத்தைக் குறிப்பிட்ட காலம் வரை நாங்கள் வைத்திருக்க வேண்டியிருக்கலாம். மேலும், ஒரு விண்ணப்பத்திற்கு உங்கள் தனிப்பட்ட தகவல்களைச் செயல்படுத்துவதற்கான ஒப்புதலை நீங்கள் திரும்பப் பெற்றால் (அத்தகைய வாய்ப்புள்ள இடங்களில்), RTX உங்களைப் பணிக்கு எடுக்காது.

நீங்கள் விண்ணப்பிக்கக்கூடிய பதவிக்காக உங்களை மதிப்பிடத் தேவையான சூழல்களிலும், எங்கள் ஆன்லைன் விண்ணப்ப அமைப்புகளில் நீங்கள் உள்நுழையும்போது அங்கீகரிக்கவும் பொருந்தும் சட்டத் தேவை இருக்கக்கூடிய இடங்களிலும் மட்டுமே RTX தகவல்களைக் கேட்கும்.

உங்கள் தனிப்பட்ட தகவல்களைப் புதுப்பிக்க, திருத்த அல்லது நீக்க வேண்டுமெனில் RTXrecruiting@rtx.com என்ற மின்னஞ்சல் முகவரிக்குத் தெரிவிக்கவும். RTX நிறுவனம் உங்களின் கோரிக்கையைச் சரிபார்த்து உடனடியாகப் பதிலளிக்கும். ஆனால் முரண்பாடான சட்டக் கடமைகள் அல்லது உரிமைகளால், நீங்கள் கோரும் விலக்கை அளிக்கமுடியாமல் போகலாம். பொருந்தக்கூடிய சட்டம் அல்லது ஒழுங்குமுறை, நீதிமன்றம், நிர்வாக/மத்தியஸ்தச் செயல்முறை அல்லது ஆய்வுத் தேவையினால் நீக்குதல் தடுக்கப்படாத பட்சத்தில் நீக்குவதற்கான கோரிக்கையைப் பொறுத்தவரை, RTX நிறுவனம் உங்களின் தனிப்பட்ட தகவல்களைத் தகுந்த காலத்திற்குள் நீக்கும். உங்கள் பெயர், உங்களின் நீக்குதல் கோரிக்கையின் தேதி, நீங்கள் விண்ணப்பித்த பணிகள், நீங்கள் எந்த நாட்டில் இருந்து விண்ணப்பித்தீர்கள் ஆகிய தகவல்கள் அடங்கிய பதிவை மட்டும் வைத்திருக்கும். உங்கள் கோரிக்கைக்கு இணங்கியதற்கான சான்றாக RTX இந்தத் தகவல்களை வைத்திருக்கும்.

# RTX நிறுவனம் குக்கீகளையோ பிற கண்காணிப்புத் தொழில்நுட்பங்களையோ எப்படிப் பயன்படுத்துகிறது?

குக்கீகள் என்பவை பயனரின் கம்ப்யூட்டர்களுக்கு அனுப்பப்பட்டு அவற்றில் சேமிக்கப்படும் சிறிய உரைக் கோப்புகளாகும். இது திரும்ப வரும் பயனர்களைக் கண்டறிய இணையதளங்களை அனுமதிக்கும், இணையதளங்களுக்கான பயனர்கள் அணுகலை எளிதாக்கும் மற்றும் உள்ளடக்கத்தை மேம்படுத்த உதவும் ஒருங்கிணைக்கப்பட்ட தரவைத் தொகுக்க இணையதளங்களை அனுமதிக்கும். குக்கீகள் பயனர்களின் கம்யூட்டரையோ ஃபைல்களையோ பாதிக்காது. இணைய பீக்கான்கள் என்பவை வெளிப்படையான கிராஃபிக் படங்கள், பெரும்பாலும் ஒரு பிக்சலின் அளவைக் கொண்டிருக்கும். அவை தளத்தின் செயல்பாட்டை டிராக் செய்ய இணையதளங்களை அனுமதிக்கும்.

ஒட்டுமொத்த மற்றும் அடையாளமற்ற பயன்பாட்டுத் தரவைச் சேகரிக்க வேலைவாய்ப்புகள் இணையதளம் மற்றும் RTX வேலைவாய்ப்பைப் பதிவிடும் இணையதளங்களில் குக்கீகளையும் இணைய பீக்கான்களையும் RTX பயன்படுத்துவதால் RTX இணையதளத்தின் செயல்பாட்டை மேம்படுத்தலாம். பயனர் அனுபவத்தை மேம்படுத்தவும் RTX குக்கீகளைப் பயன்படுத்தக்கூடும். எடுத்துக்காட்டு, ஒரு மொழி மற்றும்/அல்லது புவியியல் இருப்பிட முன்னுரிமையைத் தேர்ந்தெடுக்க உங்களை இணையதளம் அனுமதிக்கக்கூடும். உங்களின் எதிர்கால வருகைகளுக்கு அவை சேமிக்கப்படும்.

வேலை வாய்ப்புகளைப் பதிவிடும் இந்த இணையதளங்கள் RTX சேவை வழங்குநர்களின் குக்கீகளைப் பயன்படுத்துகின்றன. அமர்வின்போது உங்கள் செயல்பாட்டை நிர்வகிக்க இந்தக் குக்கீகள் ஓர் அமர்வு ஐடியைக் கொண்டிருக்கும். வெளிப்புறப் பணியிடங்களின் செயல்திறனைக் கண்காணிக்க, வெளிப்புற இணையதளத்திலிருந்து இந்த இணையதளத்திற்கு நீங்கள் வந்துள்ளீர்களா என்பதைத் தீர்மானிக்கவும் இந்தக் குக்கீகளை எங்கள் சேவை வழங்குநர்கள் பயன்படுத்துகின்றனர்.

இந்த அல்லது RTXஸின் வேறு இணையதளமோ குக்கீகளை அணுகுவதை நீங்கள் விரும்பவில்லை என்றால் உலாவித் திட்டத்தில் உள்ள அமைப்புகளைச் சரிசெய்து குக்கீகளின் பயன்பாட்டை நிராகரிக்கலாம் அல்லது முடக்கலாம். குக்கீக்களைப் பற்றியும் இணைய பீக்கான்கள் பற்றியும் கூடுதல் தகவல்களை http://www.allaboutcookies.org/ என்ற பக்கத்தில் அறிந்துகொள்ளுங்கள்.

# இந்த இணையதளத்தில் தோன்றும் மூன்றாம் தரப்பு இணைப்புகள் குறித்து நீங்கள் புரிந்துகொள்ள வேண்டியது என்ன?

சில சமயங்களில், RTX பிற நிறுவனங்களின் கட்டுப்பாட்டில் உள்ள இணையதளங்களுக்கு இணைப்புகளை வழங்கக்கூடும். எனினும், RTX இதுபோன்ற மூன்றாம் தரப்பு இணையதளங்களைக் கட்டுப்படுத்தாது. மேலும் பிற இணையதளங்களின் உள்ளடக்கம் அல்லது தனியுரிமை சார்ந்த செயல்பாடுகளுக்குப் பொறுப்பேற்காது. மூன்றாம் தரப்புத் தளத்தைப் பயன்படுத்தி RTXஸில் பணிக்கு விண்ணப்பித்தால் அந்தத் தளத்தின் தனியுரிமை அறிக்கையின் விதிமுறைகள் பொருந்தும்.

# குறிப்பிட்ட பயனர்கள் தெரிந்துகொள்ள வேண்டிய கூடுதல் தகவல்கள் என்னென்ன?

**கலிஃபோர்னியாவில் வசிப்பவர்கள்:** *கலிஃபோர்னியாவின் ஷைன் தி லைட் சட்டம்:* கலிஃபோர்னியாவில் குடியிருப்பவர்கள் முந்தைய ஆண்டிற்குள் தங்களது நேரடி மார்க்கெட்டிங் நோக்கங்களுக்காக மற்ற பிசினஸ்களுடன் பகிரப்படும் அவர்களது தனிப்பட்ட தரவை ஆண்டிற்கு ஒருமுறை கோரலாம் பெறலாம். RTX நிறுவனம் உங்கள் தனிப்பட்ட தகவல்களை அவர்களின் நேரடி மார்க்கெட்டிங் பயன்பாட்டிற்காகப் பிற பிசினஸ்களுடன் பகிராது.

*கலிஃபோர்னியா நுகர்வோர் தனியுரிமைச்சட்டம்:* கலிஃபோர்னியாவில் வசிப்பவர்களுக்கு இருக்கும் உரிமைகள் பின்வருமாறு:

- தகவல் வகைகள், அதைப் பயன்படுத்துவதற்கான நோக்கங்கள், அதை யாருடன் பகிர்கிறோம் என்பது உட்பட உங்களைப் பற்றி நாங்கள் கொண்டுள்ள தனிப்பட்ட தகவல்களையும் உங்களைப் பற்றி நாங்கள் கொண்டிருக்கும் தனிப்பட்ட தகவல்களைப் பற்றிய குறிப்பிட்ட விவரங்களைக் கோருதல்;
- தரவை நீக்குவதற்குக் கோருதல்; மற்றும்
- உங்கள் தரவை விற்க வேண்டாமென நிறுவனத்திற்கு ஆணையிடுதல். ஆனால் RTX தனிப்பட்ட தகவல்களைப் பகிர்வதில்லை என்பதால் இது பொருந்தாது.

நீங்கள் கலிஃபோர்னியாவில் வசிப்பவராக இருந்து உங்கள் உரிமைகளைப் பயன்படுத்த விரும்பினால் 1-833-882-0003 என்ற எண்ணை அழைத்தோ RTXrecruiting@rtx.com முகவரிக்கு மின்னஞ்சல் செய்தோ RTXஸைத் தொடர்புகொள்ளலாம். RTX உங்களைத் தொடர்புகொள்ளும்

வகையில் உங்கள் பெயரை (மின்னஞ்சல் முகவரி, தொலைபேசி எண் போன்றவை) வழங்கவும். அதனால், உங்கள் கோரிக்கை, எங்களுடனான உங்கள் உறவுநிலையின் தன்மை பற்றிய தகவல்கள் (எ.கா. எங்கள் இணையதளத்தின் பார்வையாளரா அல்லது பங்குதாரரா?) மற்றும் நாங்கள் எடுக்க வேண்டுமென விரும்பும் நடவடிக்கை பற்றிய விவரங்களுக்கு நாங்கள் பதிலளிக்க முடியும். உங்கள் கோரிக்கையின் அடிப்படையில் உங்களின் தனிப்பட்ட தகவல்கள் ஏதேனும் எங்களிடம் உள்ளதா என்பதைத் தீர்மானிக்க விசாரணையை மேற்கொள்வோம். உங்களின் தனிப்பட்ட தகவல்கள் எங்களிடம் இருந்தால் (உங்கள் கோரிக்கையில் வழங்கப்பட்டுள்ளவை அல்லாமல்), எங்களிடம் ஏற்கெனவே இருக்கும் உங்களின் தனிப்பட்ட தகவல்களின் அடிப்படையில் உங்களின் அடையாளத்தைச் சரிபார்க்க முயல்வோம்; உங்களைப் பற்றி எங்களிடம் இருக்கும் தனிப்பட்ட தகவல்களின் தன்மையைப் பொறுத்து நாங்கள் கோரும் தரவு இருக்கும். உங்களின் அடையாளம் சரிபார்க்கப்பட்டதும், உங்கள் கோரிக்கையை எப்படி நிறைவேற்றுவோம் அல்லது எதனால் உங்கள் கோரிக்கையுடன் இணங்க முடியாது என்பது குறித்து உங்களுக்குப் பதிலளிப்போம்.

**ஐரோப்பிய ஒன்றியம், யுனைடெட் கிங்டம் மற்றும் தரவுத் தனியுரிமைச் சட்டங்களைக் கொண்டுள்ள பிற நாடுகளில் வசிப்பவர்களுக்கு:** உங்கள் பணி விண்ணப்பதாரரின் தனிப்பட்ட தகவல்களுக்கு RTX நிறுவனமே தரவுக் கட்டுப்பாட்டாளர் ஆகும். உங்கள் கோரிக்கையைப் பொறுத்தவரை தரவுக் கட்டுப்பாட்டாளராகச் செயல்படும் குறிப்பிட்ட சட்ட நிறுவனத்தின் (அல்லது நிறுவனங்களின்) பட்டியலைப் பெற விரும்புகிறீர்கள் எனில் RTXrecruiting@rtx.com என்ற முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்பவும். உங்களின் தேசிய அல்லது மாநிலத் தரவுப் பாதுகாப்பு ஆணையத்திடம் (மேற்பார்வை ஆணையம் என்றும் அழைக்கப்படக்கூடும்) புகாரளிப்பதற்கு உங்களுக்கு உரிமை உள்ளது என்பதை அறியுங்கள். பின்வருபவற்றைச் செய்வதற்கும் உங்களுக்கு உரிமை உள்ளது: (i) உங்கள் தனிப்பட்ட தகவல்களை அணுகுதல் மற்றும் மாற்றுதல் அல்லது அழிக்கக் கோருதல்; (ii) தரவுச் செயலாக்கத்தின் மீது கட்டுப்பாடுகளைக் கோருதல்; அல்லது (iii) குறிப்பிட்ட தரவைச் செயலாக்குவதற்கு ஆட்சேபனை தெரிவித்தல் மற்றும் குறிப்பிட்ட சூழ்நிலைகளில் தரவு இடமாற்றத்தைக் கோருதல். அணுகுதல், மாற்றுதல், அழித்தல், ஆட்சேபனை தெரிவித்தல் அல்லது கட்டுப்பாடுகள்/பெயர்வுத்திறன் ஆகியவற்றைக் கோருவதற்கு RTX நிறுவனத்தைத் தொடர்புகொள்ள RTXrecruiting@rtx.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்பவும்.

**அமெரிக்காவில் வசிப்பவர்களுக்கு:** பணியாளர்களின் வரி, சம்பளம் வழங்குதல் போன்ற காரணங்களுக்காகச் சட்டப்பூர்வமாகத் தேவைப்படும் இடங்களில் RTX நிறுவனம் உங்களின் தேசிய அடையாள எண்களைச் சேகரிக்கும். RTX நிறுவனம் தேசிய அடையாள எண்களைச்

சேகரிக்கும்போது மற்றும்/அல்லது பயன்படுத்தும்போது ரகசியத்தைக் காத்தல், தேவைப்படும்போது மட்டுமே அணுகுதல் என்ற அடிப்படையில் அணுகலைக் கட்டுப்படுத்துதல், தகுந்த தொழில்நுட்பப் பாதுகாப்புகள் மற்றும் தக்கவைப்புத் திட்டங்களைச் செயல்படுத்துதல் ஆகியவற்றின் மூலமாக முறையாகக் கவனித்துக்கொள்கிறது.

**ஆஸ்திரேலியாவில் வசிப்பவர்களுக்கு:** ஆஸ்திரேலியாவில் உள்ள ஒவ்வொரு RTX நிறுவனமும் தனியுரிமைச் சட்டம் 1988 இன் (ஆஸ்திரேலியக் காமன்வெல்த்) ("ஆஸ்திரேலியத் தனியுரிமைச் சட்டம்") விதிகளால் கட்டுப்படுத்தப்படும் "APP நிறுவனம்" ஆகும். இந்த அறிக்கையில் RTX நிறுவனத்தைக் குறிக்கும் அனைத்தும் ஆஸ்திரேலியாவில் உள்ள தனிநபர்கள் குறித்த தனிப்பட்ட தகவல்களைச் சேகரித்தல், கையாளுதல், வெளியிடுதல் ஆகிய செயல்பாடுகள் மற்றும் நடைமுறைகள் தொடர்பாக RTX நிறுவனத்தின் ஆஸ்திரேலியத் துணை நிறுவனங்களுக்கும் பொருந்தும். ஆஸ்திரேலியத் துணை நிறுவனம் இந்த அறிக்கையில் விளக்கப்பட்டுள்ள எந்தக் காரணத்திற்காகவும் ஆஸ்திரேலியாவில் இருக்கும் தனிநபர்கள் குறித்த தனிப்பட்ட தகவல்களை வெளிநாட்டில் உள்ளவர்களுக்கு வெளியிடும்போது, வெளிநாட்டில் அதைப் பெறுபவர்கள் அந்தத் தகவல்கள் தொடர்பாக ஆஸ்திரேலியத் தனியுரிமைச் சட்டத்தை மீறாமல் இருப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை அந்தத் துணை நிறுவனம் எடுக்கும். ஆஸ்திரேலியாவில் வசிப்பவர்கள் தங்களின் தனிப்பட்ட தகவல்களை அணுக, திருத்த அல்லது மாற்ற, RTX நிறுவனத்தின் தனியுரிமை குறித்த நடைமுறைகளில் உங்களுக்குப் பொதுவான கேள்விகள் இருந்தால் அல்லது நீங்கள் புகார் அளிக்க விரும்பினால் privacy.compliance@rtx.com என்ற முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்பலாம். நாங்கள் பதிலளிக்க 30 நாட்களுக்கு மேல் எடுத்துக்கொண்டாலோ பதில் உங்களுக்குத் திருப்தி அளிக்கவில்லை என்றாலோ ஆஸ்திரேலியத் தகவல்கள் ஆணையரின் அலுவலகத்தில் உள்ள தனியுரிமை ஆணையத்திற்கு GPO Box 5218, Sydney NSW 2001 என்ற முகவரியில் தபால் மூலமாகவோ 1300 363 992 என்ற எண்ணில் தொலைபேசி மூலமாகவோ enquiries@oaic.gov.au என்ற மின்னஞ்சல் முகவரிக்கு மின்னஞ்சல் மூலமாகவோ புகாரளிக்கலாம்.

# உங்கள் தனிப்பட்ட தகவல்களை அணுகுவது, திருத்துவது அல்லது மாற்றுவது எப்படி?

RTX நிறுவனத்தின் ஏதேனும் ஆன்லைன் பணி விண்ணப்ப அமைப்புகளில் உங்கள் தகவல்களை அணுகவோ மாற்றவோ உங்களின் சுயவிவரத்தில் உள்நுழைந்து தேவையான திருத்தங்களையோ நீக்குதல்களையோ செய்யலாம். மின்னஞ்சல் போன்ற வேறு வழிகளில்

பணிக்கு விண்ணப்பித்திருந்தால், உங்கள் பணிக்குத் தேர்ந்தெடுக்கும் உள்ளூர் நபரைத் தொடர்புகொள்ளவும். பணி இணையதளத்தில் உள்ள சிக்கல்கள் குறித்துப் புகாரளிக்கவோ கேள்விகள்/சந்தேகங்களைக் கேட்கவோ RTXrecruiting@rtx.com என்ற முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்பவும்.

உங்கள் தனிப்பட்ட தகவல்கள் துல்லியமாகவும் முழுமையானதாகவும் சமீபத்தியதாகவும் இருப்பதை உறுதிப்படுத்த, தேவையான தகுந்த நடவடிக்கைகளை RTX நிறுவனம் மேற்கொள்கிறது. RTX நிறுவனம் உங்கள் தனிப்பட்ட தகவல்களின் துல்லியத்தன்மையை உறுதிசெய்யவோ புதுப்பிக்கப்பட்ட அல்லது கூடுதல் தகவல்களை வழங்கவோ அவ்வப்போது உங்களிடம் கோரக்கூடும்.

## RTX நிறுவனத்தைத் தொடர்புகொள்வது எப்படி?

உங்களின் தனிப்பட்ட தகவல்களை மாற்ற, திருத்த அல்லது நீக்க விரும்பினால் RTXrecruiting@RTX.com என்ற முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்பவும். மேலும், ஏதேனும் கருத்துகள், கேள்விகள் அல்லது பரிந்துரைகள் இருந்தால், RTXrecruiting@rtx.com என்ற முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்பவும்.

RTX நிறுவனத்தின் தனியுரிமை நடைமுறைகள் குறித்து உங்களுக்குக் கேள்விகள் இருந்தால், privacy.compliance@rtx.com என்ற முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்பவும். குறிப்பிட்ட RTX நிறுவனத்திற்கு நியமிக்கப்பட்டுள்ள தரவுப் பாதுகாப்பு அதிகாரியைத் தொடர்புகொள்ள விரும்பினால் privacy.compliance@rtx.com என்ற முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்பவும். தகுந்த தரவுப் பாதுகாப்பு அதிகாரிக்கு (பொருந்தும் சூழலில்) அதை அனுப்புவோம்.